நாள்: 15 மார்ச் 2023

# முஸ்லிம் கலைக் கல்லூரி

திருவிதாங்கோடு

## தமிழ்த்துறை தமிழ் ஆய்வு மையம் ஒருங்கிணைக்கும் தேசிய கருத்தரங்கம்

# சான்றிதழ்

முனைவர்/ திரு/ திருமதி/ செல்வி ......என்....ஆர்...ஷிபஜா.............................. அவர்கள்

திருவிதாங்கோடு முஸ்லிம் கலைக் கல்லூரி தமிழ் ஆய்வு மையத்தில் நடைபெற்ற

**"தமிழ் இலக்கியங்களில் மானுட விழுமியங்கள்"** என்னும் தேசிய கருத்தரங்கில்

..சங்க....இலக்கியத்தில்...பெண்களின்...நிலைப்பாடுகள் என்ற தலைப்பில் ~~பங்கேற்றார்~~/

கட்டுரை வழங்கினார் எனப் பாராட்டி சான்றளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| லயன் Dr.H.முகம்மது அலி<br>கல்லூரி தாளாளர் | முனைவர் எட்வின் ஷீலா<br>கல்லூரி முதல்வர் | முனைவர் ஜா.ஞா.ஜோணி ஜெபமலர்<br>தமிழ்த்துறைத்தலைவர் |



# தமிழ் இலக்கியங்களில் மாறுட விழுமியங்கள்


தொகுப்பாசிரியர்கள்

முனைவர். ஜா.ஞா.ஜெபமலர்

முனைவர். த.மினி

முனைவர். சௌமியா

# தமிழ் இலக்கியங்களில் மானுட விழுமியங்கள்

(தேசிய கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தமிழ்த்துறை ஆய்வு மையம்
முஸ்லிம் கலைக் கல்லூரி
திருவிதாங்கோடு

பாவிகை பதிப்பகம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தமிழ் இலக்கியங்களில் மானுட விழுமியங்கள் |
| பொருள் | : | ஆய்வுக் கட்டுரைகள் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு மார்ச் 2023 |
| உரிமை | : | பதிப்பாசிரியருக்கு |
| ISBN | : | 9789356 801301 |
| பக்கங்கள் | : | 272 |
| நூலின் அளவு | : | 1/8 டெமி |
| விலை | : | 300 |
| நூல் மற்றும் அட்டை வடிவமைப்பு | : | வள்ளியூர் வி. பெருமாள்<br>செல்: 99420 33226 |
| வெளியீடு | : | பாலிகை பதிப்பகம்<br>10/59B, V.R. Building<br>Near Amla Covent,<br>Thuckalay - 629175 |

முஸ்லிம் கலைக் கல்லூரி
தமிழாய்வு மையம் சார்பில்

# தமிழ் இலக்கியங்களில் மானுட விழுமியங்கள்

என்ற தலைப்பில் நடத்தப்பட்ட தேசிய கருத்தரங்கில் பங்கேற்று சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வாளர்களின் ஆய்வுக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு ஆய்வுக்கோவையாக வெளியிடப்பட்டுள்ளது.


தொகுப்பாசிரியர்கள்:

முனைவர் ஜா.ஞா.ஜோணி ஜெபமலர்
(தமிழ்த்துறைத் தலைவர்)

முனைவர் த.மினி
(உதவிப் பேராசிரியர்)

முனைவர் சு.சௌமியா
(உதவிப் பேராசிரியர்)



வெளியீடு:

தமிழ்த்துறை ஆய்வு மையம்
முஸ்லிம் கலைக் கல்லூரி
திருவிதாங்கோடு 629174

## ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர் ஜா.ஞா.ஜோணிஜெபமலர்

(தமிழ்த்துறைத்தலைவர்)

**முனைவர் த.மினி**

(உதவிப் பேராசிரியர்)

**முனைவர் சு.சௌமியா**

(உதவிப் பேராசிரியர்)

## கருத்தரங்க அமைப்பு குழு

**முனைவர் த.சேம்**

முனைவர் சா.வி.சந்தோஷ்குமார்

முனைவர் மு.முகம்மது அஸ்கர்

முனைவர் ஜா.லாலி ஏதேஷ்


1. தமிழ

2. குறுந்

3. புறநா

4. புறநா

5. ரத்த
சமூக

6. நால

7. தேம்

8. பதி
வாழ்

9. சங்க

10. பொ

11. சங்க

11. சங்க இலக்கியத்தில் பெண்களின் நிலைப்பாடுகள்
- முனைவர் என்.ஆர். ஷிபஜா 77

12. மின்சார பூவில் மனித மாண்புகள்
- கோ.சத்யா 82

13. பொருநராற்றுப்படை காட்டும் சமுதாயம்
- ப.பியூலா 90

14. பழந்தமிழரின் தொழில்நுட்பங்கள்
- தே.ரெம்யா 97

15. திருக்குறள் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள்
- முனைவர் பா.கோ.விஜயலட்சுமி 105

16. திருக்குறளில் விழுமியம்
- முனைவர் ஜா.ஞா.ஜோணி ஜெப மலர் 110

17. அகநானூற்றில் இல்லற விழுமியங்கள்
- ப.ஷைனி 114

18. குமரி மாவட்ட நாவல்களில் நெய்தல் நில மக்களின் உணவு முறைகள்
- ரா.மேரி ஜாண்சி 121

19. சு.தமிழ்செல்வியின் நாவல்களில் மானுட விமியங்கள்
- தா.ஜெயஷீலா 128

20. திருக்குறளில் மானுட விழுமியங்கள்
- முனைவர் த.மினி 135

21. அற இலக்கியங்கள் வலியுறுத்தும் வாழ்வியல் விழுமியங்கள்
- முனைவர் ஜா.லாலி ஏதேஷ் 140

22. மனவளத்தை மேம்படுத்தும் தமிழ் இலக்கியங்கள்
- த.ரெனில் ரெஞ்சினி 148

23. எட்டுத்தொகையில் மருத்துவ செய்திகள்
- இ.மார்ஜிலின் ஜின்சி 153

11

# சங்க இலக்கியத்தில் பெண்களின் நிலைப்பாடுகள்

முனைவர் நா.ரா. ஷிபஜா,
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
முஸ்லிம் கலைக் கல்லூரி
திருவிதாங்கோடு

## முன்னுரை

சங்க காலத்தில் அரசாண்ட மன்னர்களைப் பற்றியும், அவர்களுடைய ஆட்சிமுறை பற்றியும், மக்களின் சமுதாய வாழ்வு நிலை பற்றியும், போர் வீரர்கள், அமைச்சர்கள், புலவர்கள் பற்றியும் நாம் அறிவதற்கு முழுவதும் துணை நிற்பது அக்காலத்தில் எழுதப்பட்ட தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு இன்னும் பிற இலக்கியங்களே இலக்கியத்தின் வழியிலன்றிச் சங்க காலத்திய நிகழ்வுகளைத் துல்லியமாக அறிவது கடினமே. அவ்வகையில் சங்க காலத்தில் வாழ்ந்த பெண்கள் சமூகத்தில் எவ்வாறு காணப்பட்டனர் அவர்களின் சமூக வாழ்வின் நிலை என்ன என்பதனை மையமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

## சங்க கால மகளிர் மாண்புகள்

ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் வாழ்வே முழுமையான நிறைவுற்ற வாழ்வு என்பதை உணர்ந்த பண்டைய சான்றோர்கள் மகளிரின் மாண்புகள் பற்றித் தம்பாடல்களில் கூற

தவறியதில்லை. ஒரு பெண்ணுக்குத் தன் உயிரைக் காட்டிலும் நாணம் சிறந்தது. அந்த நாணத்தை காட்டிலும் கற்பு சிறந்தது என்று பெண்ணின் பெருநலத்தைத் தொல்காப்பியர்,

"உயிரினும் சிறந்தன்று நாணே
நாணினும் செயிதீர் காட்சிக்
கற்புச் சிறந்தன்று". (தொல் களவியல் 23)

என்ற தமது நூற்பாவால் பெண்மைக்குரிய குணநலனையும், கற்பின் பெருமையையும் எடுத்துக் காட்டுகிறார். மேலும் பெண்மையின் மாண்புகள் பற்றித் தொல்காப்பியர்,

"அச்சமும் நாணும் மடமுந் துறுதல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய" (தொல் களவியல் 8)

என்ற நூற்பாவால் அச்சம், நாணம், மடம் என்ற மூன்றும் பெண்மைக் குரிய சிறந்த பண்புகளாகும் எனக் கூறுகிறார். அச்சம் என்பது மகளிர் தம் மனதில் தோன்றும் ஒரு வகை நடுக்கமாகும். நாணம் என்பது பெண்மை தனக்குப் பொருத்தமில்லாத பிற செயல்களில் ஈடுபடாமல் இருத்தலாகும். மடம் என்பது இவ்வுலக இயல்பினைப் பிறரால் அறிந்துணர்ந்து பெண்கள் அதன் வழி நெறி பிறழாது நடத்தலாகும். இவ்வாறு பெண்மைக்குரிய பெருமைகளாகக் கூறப்படுகின்றன.

உயிரைக் காட்டிலும் சிறந்தாகக் கருதப்படும் பெண்மையின் நாணத்தை விளக்கும் பொருட்டாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது. சங்க காலத் தலைவி ஒருத்தி தனக்கு ஏற்பட்ட நாணத்தின் மிகுப் பாட்டைத் தன் தோழியிடம் பிரிந்து சென்ற காதலனை நினைத்து முன்பு இருவரும் கூடியிருந்து மகிழ்ந்த இடத்தில் பழைய நினைவுகளையெல்லாம் நினைத்து அழுது கொண்டிருந்தேன். தன் அழுகையின் காரணம் புரியாத அன்னை அழுவதை நிறுத்தி விட்டு உனக்கு நேர்ந்த துன்பத்தைக் கூறுவாயாக என அன்போடு கேட்டாள். அந்நேரத்தில் நான் உயிரினும் மேலான நாணத்தையும் மறந்து என் வருத்தத்திற்குக் காரணம் காதலனைப் பிரிந்தமையால் ஏற்பட்டதே என்பதை

"உயிரினும் பிறந்த நாணம் நனிமறந்து
உணரத்தல் உயரிந்தனனே தோழி (நற்றிணை 178 8—9)

என்ற அடிகளால் தனக்கு ஏற்பட்ட நிலையினை எடுத்துக் கூறுகின்றாள். இதனால் பெண்கள் மறந்தும் தமது நாணத்தை வெளிப்படுத்தியவால்லர் என்பதை உணரலாம். இவ்வாறு

பண்டைய மகளிர் மகட்பேறு விருந்தினர் ஓம்பல் போன்ற இல்லறப் பாங்கிலிருந்தும் அச்சம் நாணம் மடம் என்னும் முக்குண நலன்களிலிருந்தும் வழுவாது வாழ்ந்தமை நன்கு அறியலாம். கற்பிற்கு கண்ணகி அருந்ததி போன்ற தெய்வமகளிரை எடுத்துக் காட்டுவது இன்றளவும் உள்ள வழக்கு. ஆனால் இன்றைய மகளிரிடையே வெகுவாகக் குறைந்த நாகரிகம் என்னும் மாயைக்கு இரையாகி விட்டமை கண்கூடு.

## நாட்டுப்பற்று

சங்க காலத்தில் ஆட்சி செய்த மூவேந்தர்களிடையேயும் அவர்களுக்குக் கீழ் ஆட்சி செய்த வேளிர்கள். குறுநில மன்னர்கள் சீறூர் மன்னர்கள் போன்ற நோரிடையும் எப்போதும் போரும் பூசலும் இருந்தே வந்துள்ளன. இத்தகைய போரில் பெண் பாலர்கள் ஆயுதம் ஏந்திப் போரிட வில்லையாயினும் நடைபெற விருந்த பெரும் போரைத் தடுத்து நிறுத்தும் வல்லமை படைத்தவர்களாக இருந்துள்ளனர். பழந்தமிழகத்தில் வாழ்ந்த தாய்மார்கள் தமது மகன்கள் பெரு வீரர்களாக இருந்து வெற்றிகள் பல அடைந்து நாட்டிற்கும் பிறந்த குடிக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என நினைத்தது அவர்களின் நாட்டுப்பற்றையே காட்டுகிறது. தோல் சுருங்கி நரை எய்திய முதியோள் ஒருத்தி இறுதி காலத்தில் தன்னைப் பாதுகாக்கத் துணை வேண்டுமே எனக் கருதாது சிறுவயதே உடைய தன் புதல்வனைப் போருக்கு அனுப்புகிறாள். போர் முடிந்து திரும்பும் வீரர் பலரும் அச் சிறுவனின் வீரத்தைப் புகழ்ந்து கூறக் கேட்கிறாள். அந்த முதியோர் அப்போது தன் அருமைப் புதல்வனைப் பெற்றெடுத்த நாளினும் பெருமை கொள்கிறாள் என்பதை,

> “வால் நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
> களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை
> ஈன்ற ஞான்றினும் பெரிதே... (புறநானூறு 277 2—4)

என்று கூறுவதன் வழி அறியலாகின்றது.

## மகளிரன் நிலைப்பாடுகள்

அடக்கம் பொறுமை தியாகம் இரக்கம் அழகு ஒப்புரவு தொண்டு முதலிய குணங்கள் கொண்டு விளங்குவது பெண்மை எனப்படுகிறது. இத்தகைய பெண்ணானவள் கணவனுக்கு

ISBN : 9789356 801301

விருந்து படைத்து மகிழ்பவளாகவும் அவன் பிரிவைத் தாங்காது வருந்தி வரவை எதிர் நோக்கி இருப்பவளாகவும் கணவன் பரத்தை ஒழுக்கம் மேற்கொண்டாலும் சிறு ஊடலுக்குப் பிறகு அவனை மீண்டும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு வாழ்பவளாகவும் விருந்தினர் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்து இல்லறக் கடமையைப் பேணுபவளாகவும் பொருளாதாரத்தில் ஆடவரின் கையை எதிர்பார்த்திருப்பவளாகவும் சங்கப்பாடலில் காட்டப்படுகின்றாள். கணவன் போரிலோ அல்லது இயற்கையிலோ மரணம் எய்திய நிலையில் அப்பெண் சுயவிருப்பின்றிச் சமுதாய விதி முறைகளுக்கு ஏற்றவாறே வாழ நேரிடுகிறது.

## அணிகலன்கள்

சங்காலத்தில் வாழ்ந்த வெளிமான் என்ற மன்னன் இறந்த செய்தியைப் பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் தம் பாடலில் பலவாறு எடுத்துக் கூறியுள்ளார். வெளிமான் துஞ்சிய நிலையில் அவனது உரிமை மகளிர் பலரும் பழைய அழகு நலம் கெட அழுது புலம்பியதாகவும் கைவளையல்கள் களைந்து விடப்பட்டதாகவும் கூறுகின்றார். இதனை

"தொடிகடி மகளிரிற் தொல்கபவின் வாடிப்
படுநர் கரும்பும் பையென்றனவே" (புறநானூறு 238: 6—7)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக அறியப்படுகிறது. அதே போல் கரிகால் பெருவளத்தான் இறந்த போது அவனது உரிமை மகளிர் பலரும் தமது அணி நலன்களைக் களைந்தனர் பெரும் புகழ் கொண்ட கரிகால் பெருவளத்தானின் மறைவிற்கு இவ்வுலகம் இரக்கம் கொள்ளத் தக்கது என்பதை,

"இறந்தோன் தானே அளித்த இவ் வுலகம்
மெல்லியில் மகளிரும் இழைகளைந் தனரே"
(புறநானூறு 224 :11—7)

## பெண் கல்வி

பெண் கல்வியில் பழந்தமிழகம் சீருடனும் சிறப்புடனும் விளங்கியுள்ளது. கல்வி என்பது அனைத்துப் பிரிவினருக்கும் எட்டுவதாக இருந்துள்ளது. வெண்ணிக்குயத்தியார் பெருங்கோப் பெண்டு குறமகள் இளவெயினி குறமகள் குறி எயினி காவற் பெண்டு உள்ளிட்ட பல நிலையில் உள்ளவர்களும் கல்வியில்

சிறந்து விளங்கியுள்ளனர். இன்னவர் படிக்க வேண்டும் இன்னவர் படிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு அன்றைய சமுதாயத்தில் இல்லாமல் இருந்ததையே இது காட்டுகிறது. மன்னருக்கே அறிவுரை நல்கும் ஔவையார் போன்ற பெண்மணிகளும் கல்வியில் சிறந்து விளங்கியுள்ளனர்.

### அரசியல் அறிவு

சங்கப் பெண்பாற் புலவர்களுள் தலைமையானவர் ஔவையார். இவர் அதியமானுக்காகக் காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த தொண்டைமானிடம் சென்று நடக்கவிருந்த பெரும் போரைத் தன்னுடைய அறிவாற்றலைக் கொண்டு தடுத்து நிறுத்தினார் என்பதிலிருந்து அக்காலத்திலிருந்த பெண்கள் பெண் புலவர்களாகவும் ஆட்சியறிவு பெற்றவர்களாகவும் விளங்கினர் என்பது இதன் மூலம் புலனாகிறது.

### முடிவுரை

சங்க இலக்கியச் சான்றுகள் அடிப்படையில் அக்காலத்தில் வாழ்ந்த பெண்களின் வாழ்வு நிலை பற்றி நோக்கியதில் அவர்கள் நாட்டுப்பற்று மிகுந்தும் கல்வியில் சிறந்தும், நல்ல ஒழுக்கத்துடனும் வாழ்ந்துள்ளனர் என்பது அறியலாகிறது. ஆனாலும் அக்காலச் சமூகத்தில் கணவனை இழந்த கைம்பெண்கள் கைமை நோன்பு போன்ற கொடுமைகளை அனுபவித்துள்ளனர் என்பதையும் இக்கட்டுரை தெளிவு படுத்துகிறது.